கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.196/2016**

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 07.02.2026 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.E.Swetha, B.B.A., L.L.B.(Hons), அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 07.02.2026 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | செந்தில்குமார் | வயது | 47 |
| தந்தை பெயர் | நீலமேகம் | கிராமம் | அல்லூர், சேத்தியாத்தோப்பு |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1,2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நான் விவசாயம் செய்கிறேன். வழக்கு சொத்தின் புல எண் தெரியுமா என்றால் தெரியும் அது புல எண்.212/1C. சொத்து எனக்கு எப்படி பாத்தியம் என்றால் அது எனக்கு பூர்வீக சொத்து ஆகும். எந்த வகையில் பூர்வீக சொத்து என்றால் 8 தலைமுறைகளாக எங்களுக்கு சொந்தமானது. 8 தலைமுறைக்கு சொந்தமானது என்பதை நிரூபிக்க ஆவணங்கள் உள்ளதா என்றால் எனது தாத்தாவிற்கு சொந்தமானது என்பதற்கு ஆவணங்கள் உள்ளது.

2. வழக்கு சொத்திற்கு உண்டான வருவாய்துறை ஆவணங்கள் பட்டா, சிட்டா மற்றும் அடங்கல் ஆனது வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு யாருடைய பெயரில் இருந்தது என்றால் என்னுடைய பெயரில் தான் இருந்தது. எனது தாத்தா ஆவணங்கள் நேரடியாக எனக்கு கிடைக்கப்பெற்றதா என்றால் வாரிசு எனது முறையில் தந்தை இறந்த பிறகு என் பெயருக்கு மாற்றப்பட்டது. ஆவணங்கள் எனது தாத்தாவின் பெயரில் இருந்து தந்தை பெயருக்கு மாற்றப்பட்டு பின்னிட்டு என் பெயருக்கு மாற்றப்பட்டன என்றால் சரிதான். எனது தந்தைக்கு என்னை தவிர இதர வாரிசுகள் உள்ளனரா என்றால் நான் உட்பட எனது தங்கை 2 பேர் உள்ளனர்.

3. என் தங்கை 2 பேருக்கு சொத்தில் பங்கு இல்லையா என்றால் அவர்களுக்கு நான் திருமணம் செய்த வைத்த காரணத்தினால் அவர்கள் சொத்தில் தங்கள் பங்கை

விடுதலை பத்திரம் மூலம் விட்டுகொடுத்து விட்டார்கள். இவ்வழக்கில் பிரதிவாதிகள் 1 மற்றும் 2 ற்கு எதிராக என்ன பரிகாரம் கோரி உள்ளேன் என்றால் வழக்கு சொத்திற்கு உண்டான கூட்டு பட்டாவை பெயர் மாற்றம் செய்ய கோரி தாக்கல் செய்துள்ளேன். புல எண்.212/1c ற்கு உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் செய்யப்பட்டது. அது எனக்கு தெரியாமல் செய்யப்பட்டது ஆகையால் நான் VAO விடம் இது குறித்து புகார் அளித்துள்ளேன். புல எண்.212/1c உட்பிரிவு செய்யப்பட்டு புல எண்.212/1c1A செந்தில்குமார் பெயரில் புல எண்.562 என்றும், புல எண்.212/1c1B பட்டா எண்.1365 சித்திரகலவதி பெயரிலும், புல எண்.212/1c2 பட்டா எண்.1316 இவ்வழக்கின் 4 ம் பிரதிவாதியான மங்கையர்கரசி பெயரிலும் புல எண்.212/1c3 பட்டா எண்.562 இவ்வழக்கின் வாதியான தங்களின் பெயரிலும் உள்ளது என்றால் தற்போது அவ்வாறு தான் உள்ளது. இந்து உட்பிரிவுகள் ஆனது சார் ஆட்சியர்களால் முறையாக அறிவிப்பு கொடுத்து தான் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான் ஆனால் அவர்களின் பெயரை தவறாக சேர்த்த காரணத்தினால் அவற்றை நீக்க கோரி நான் மனு அளித்த போது என்னை நீதிமன்றத்தை அணுக கூறினார்கள்.

4. நான் 03.11.2015 சார் ஆட்சியர் மற்றும் வட்டாட்சிரிடம் வழக்கு சொத்தான புல எண்.212/1c 1952 ச.அடி காலி மனையை பெயர் மாற்றம் செய்ய கோரி மனு அளித்துள்ளேன் என்றால் சரியல்ல வழக்கின் 4 ம் பிரதிவாதியான மங்கையர்கரசி தான் மனு கொடுத்தார். சாட்சி தாமகவே காலிமனையை சேர்த்து பெயர் மாற்றகோரி மனு கொடுத்தது அவர்கள் மறுத்து விட்டார்கள் என்று கூறினார். இது சம்மந்தமாக நான் ஏதேனும் மனு அளித்துள்ளேனா என்றால் இல்லை. விசாரணைக்காக மட்டும் தான் சென்றேன். 16.11.2016 மற்றும் 19.12.2017 ஆகிய தேதிகளில் விசாரணை நடைப்பெற்றது என்றால் சரிதான். விசாரணை முடிவில் என்ன தீர்மானக்கப்பட்டது என்றால் என்னுடைய பெயரில் இருந்து பெயர் மாற்றம் செய்யக்கூடாது என்று சிதம்பரத்தில் முடிவானது அதை எதிர்த்து 4 ம் பிரதிவாதி மேல்முறையீடு செய்யதகும் தோல்வியுற்றது.

5. மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு செய்து விசாரணை நடைப்பெற்று 19.12.2017 அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி புல எண்.212/1c2 ற்கு விண்ணப்பித்த அனைவரிடமும் அதற்கு உண்டான ஆவணங்கள் சமர்ப்பித்த காரணத்தினால் உரிமையியல் நீதிமன்றத்தை அணுகி தீர்வு காணுமாறு அறிவுறுத்தப்பட்டது என்றால் சரிதான். 3,4 பிரதிவாதிகள் எதிராக என்ன பரிகாரம்

என்றால் அவர்கள் தாமாக இவ்வழக்கில் விண்ணப்பம் மூலம் சேர்க்கப்பட்டுள்ளனர். அசல் வழக்கு எண்.6/2016 ல் இவ்வழக்கின் 1,2 பிரதிவாதிகள் தரப்பினர்கள் இல்லை என்றாலும் அவர்களிடம் எந்த பரிகாரமும் அவ்வழக்கில் கோர வில்லை என்றாலும் எனக்கு ஞாபகமில்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

(Sd/- E.Swetha)
Additional District Munsif
Chidambaram